☎ 04175 - 236654 / 235295

# SHANMUGA INDUSTRIES
# ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Accredited with "B+" GRADE by NAAC in Cycle 1
Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

## சண்முகா கல்லூரியில் 26 ஆம் ஆண்டு விளையாட்டு விழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் 26 ஆம் ஆண்டு விளையாட்டு விழா நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக இந்திய ரயில்வே பயிற்சியாளரான சர்வதேச தடகள வீரர் **வீ.நல்லுசாமி அண்ணாவி** அவர்கள் கலந்துகொண்டு உரைநிகழ்த்தி, பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வென்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.

இவ்விழாவில் கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** தலைமையுரையாற்றினார். செயலர் மற்றும் தாளாளர் **எல்.விஜய் ஆனந்த்** முன்னிலையுரை நிகழ்த்தினார். முன்னதாக, முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** வரவேற்புரையாற்றினார். விளையாட்டு அறிக்கையினை உடற்கல்வி இயக்குநர் முனைவர் **எம்.கோபி** வாசித்தார். விழாவில் அறக்கட்டளை உறுப்பினர்கள் **ஏ.டி.பி.எஸ்.கஸ்தூரி அம்மாள், டாக்டர் தையா கிருஷ்ணமூர்த்தி, என்.இராதாபாய் அம்மாள், பி.கலைமணி அம்மாள், குமுதா அருணகிரி, ச.தமிழரசி அம்மாள், சி.சசிகலா, அருள்விழி கார்த்திகேயன், மணிமொழி முத்துசாமி, எம்.முத்துகுமார், பி.அருணாதேவி, பி.பரிமளா, எம்.ரெட்டிராமு, ஜெயா சக்திகுமார்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** மகிழ்வுரையாற்றினார். துணை முதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார். நிறைவாக பொருளாளர் **எ.ஸ்ரீதர்** நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சியினைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **இரா.சங்கர்** தொகுத்து வழங்கினார்.

விழாவில் சிறப்பு விருந்தினர் **வீ.நல்லுசாமி அண்ணாவி** அவர்கள் உரையில், "மாணவர்கள் கல்வியோடு விளையாட்டுத் திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இன்றைக்கு அரசு பணிகளில் பல வாய்ப்புகள் விளையாட்டுத் துறை மாணவர்களுக்கு இருப்பதாகவும் எடுத்துரைத்தார். விளையாட்டில் ஈடுபாடுள்ள மாணவர்கள் கல்வியும், ஒழுக்கமும் உடையவர்களாக இருப்பார்கள் என்பதையும் பல்வேறு சான்றுகளுடன் எடுத்துக்காட்டி விளக்கினார். சண்முகா கல்லூரியில் விளையாட்டுத் துறையில் சாதித்த மாணவர்கள் பலர் அரசுப் பணிகளில் இருப்பதையும் சுட்டிக்காட்டினார். அதனைத் தொடர்ந்து பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளையும், பதக்கங்களையும் வழங்கிச் சிறப்பித்தார்". பின்னர் மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் அறக்கட்டளை உறுப்பினர்கள், விருந்தினர்கள், பெற்றோர்கள், பத்திரிக்கை நண்பர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவியர் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாட்டினை கல்லூரியின் துறைத்தலைவர்கள், பேராசிரியப் பெருமக்கள், அலுவலகப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

செயலர் மற்றும் தாளாளர்


சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
SHANMUGA INDUSTRIES ARTS AND SCIENCE COLLEGE


சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
SHANMUGA INDUSTRIES ARTS AND SCIENCE COLLEGE
Accredited With "B+" Grade by NAAC,
NAAC